**S. M. FERNANDO**
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580. HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
பார்த்து செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகச் செய்து கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 03 புதன்கிழமை [18-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 22

## வடக்கு-கிழக்கைப் பிரிக்கக் கூடாது; அரசமைப்பில் மாற்றம் தேவை

# சுயாட்சி அமைப்பு ஒன்றை நிறுவுமாறு தொண்டா அரசாங்கத்துக்கு யோசனை

## முஸ்லிம்களுக்கு பிரதேச சபை ஒன்றியம் சிங்களவர் நலன் பேண விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசம்பர் 18

வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்படாமல், அங்குள்ள மக்களுக்கு, அர்த்தமுள்ள சுயாட்சி அதிகாரம் வழங்கும் விதத்தில், சுயாட்சி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

அதே வேளை முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணும் வகையில், முஸ்லிம் பிரதேச சபைகள் ஒன்றியம் ஒன்றும் நிறுவப்பட வேண்டும்.

அங்கு வாழும் சிங்கள மக்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாப்பதற்கு விசேட வசதிகளும் ஏற்பாடுகளும் செய்யப்படுவது அவசியம்.

— இவ்வாறு அமைச்சர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் இனப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்த திட்டத்தில் அரசாங்கத்துக்கு யோசனை தெரிவித்துள்ளார்.



அவர் தமது கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் என்ற வகையிலும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் இந்தத் திட்டத்தை மஜராகச் சமர்ப்பித்திருக்கிறார்.

"வடக்கு—கிழக்கிற்குச் சுயாட்சி" என்ற அவரது திட்டம் ஆங்கிலத்தில் 19 பக்கங்களைக் கொண்டதாகும்.

ஸ்ரீலங்காவின் ஏனைய ஏழு மாகாணங்களையும் தவிர்த்து, வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் கூடுதல் அதிகாரப் பரவல் செய்து, சுயாட்சி உரிமை வழங்கும் விதத்தில் அவரது திட்டம் அமைந்துள்ளது.

மாகாணசபைத் திட்டம் நடைமுறைக்கு வந்து மூன்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணப் பொலீஸில் பத்தாயிரம் பேர்!

யாழ்ப்பாணம், டிச. 18

தொண்டமானின் யோசனையில் தெரிவிக்கப்பட்ட உத்தேச மாகாணப் பொலீஸ் படையில் சகல தரங்களையும் கொண்ட பத்தாயிரம் பொலீஸார் இடம்பெறுவர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள இனவிகிதாசாரப்படி பின்வரும் அடிப்படையில் பொலீஸாருக்கு ஆட்சேர்க்கப்படும்.

| | |
|---|---|
| இலங்கைத்தமிழர் | - 6,500 |
| இந்தியத் தமிழர் | - 375 |
| முஸ்லிம்கள் | - 1.775 |
| சிங்களவர் | - 1.350 |

## பிரேமதாஸா, தொண்டா சிறிமாவைப் பார்த்தனர்

நரம்புத் தளர்ச்சி காரணமாக கொழும்பு பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

திருமதி பண்டாரநாயக்கா தற்போது மூளை நரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் இருநாட்களில் குணமடைவார் என்று எதிர்பார்க்கப்பட்டதாகவும்—

ஆனால் அவரின் உடல் நிலை இன்னும் முழுஅளவில் தேறி வரவில்லை என்றும் மூளை நரம்பு சிகிச்சைப் பிரிவு நிபுணர் டாக்டர் ஜே. பி. பீரிஸ் தெரிவித்தார்.

## குருநகர் பகுதி மீனவர்கள் 12பேரின் கதி தெரியவில்லை

குருநகரில் இருந்து நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) பாலைதீவு நோக்கிச் சென்ற நான்கு பாய்மரப் படகுகளும், அவற்றில் சென்ற 12 மீனவத் தொழிலாளர்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழிலாளர்களது உறவினர்கள் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தின் காட்சகச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பிரஸ்தாப தொழிலாளர்கள் பாலைதீவுக்குச் சென்ற அன்றைய தினம் அப்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் ரோந்துப் படகுகள் காணப்பட்டன என்று அங்கிருந்து இடையிடையில் திரும்பி வந்த வேறு சிலர் தெரிவித்தனர். (ஒ-51)

## குறிப்பிடத்தக்க சில புதிய யோசனைகள்

யாழ்ப்பாணம், டிச. 18

அமைச்சர் தொண்டமானின் யோசனையில் புதிதாக இடம்பெற்றிருக்கும் குறிப்பிடத்தக்க அம்சங்கள் வருமாறு:-

★ வடக்கு, கிழக்கு இணைப்பு கேள்விக்கு அப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

★ வடக்கு கிழக்கு மாகாணத்தின் இப்போதைய எல்லைகள் மாற்றப்படலாகாது.

★ முன்னர் அமைப்பின் 13ஆவது திருத்தத்தின்கீழ், மாகாண அரசுக்கும், மத்திய அரசுக்கும் ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் சம்பந்தமான துறைகளின் பட்டியல் மூன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு மாகாணசபைக்குரியது; இரண்டாவது மத்திய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களவர் நலன்பேண விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், டிச. 18

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனையில் உத்தேச சுயாட்சி அமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களுக்குப் போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவதாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள மக்களைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கம் அவர்களின் பாதுகாவலனாகவும், முறையீட்டைக் கேட்டு நிவர்த்தி செய்யக்கூடிய நிறுவனமாகவும் விளங்கும் [illegible] அந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் எந்தப்பகுதியில் வாழும் சிங்கள மக்களும் வடக்கு - கிழக்கின் எப்பகுதியிலும் உடைமைகளை வைத்திருப்பதற்கு உள்ள உரிமை மாற்றப்படலாகாது எனவும் —

சுயாட்சி அமைப்பின் ஸ்தாபிப்போடு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப பகிர்வு செய்யப்படவேண்டும் எனவும் — மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர்களின் நலன்களை வலியுறுத்தி பின்வரும் [illegible]

## உத்தேச சுயாட்சி அமைப்பின் அதிகாரங்கள் தெளிவாக இல்லை

யாழ்ப்பாணம், டிச. 18

அமைச்சர் தொண்டமானின் யோசனைகளில் பல முக்கியமான விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. அவற்றில் சில வருமாறு:-

★ சுயாட்சி அமைப்பின் சட்டவாக்கல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை;

★ மாகாணசபைக்குரிய அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன; ஆனால் தொண்டமான் வெளியிட்டிருக்கும் உத்தேச சுயாட்சி அமைப்புத் திட்டத்தில் அந்த அமைப்புக்குரிய அதிகாரப் பரவலாக்கல் விரிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

★ உத்தேச சுயாட்சி அமைப்பு சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர், கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் எண்ணிக்கை ஆகியன குறிப்பிடப்படவில்லை.

★ உத்தேச சுயாட்சி அமைப்பின் கீழ் ஸ்தாபிக்கப்படும் மேல் நீதிமன்றின் நீதித்துறை அதிகாரங்கள், நிர்வாகிக்கும் ஆகியவை திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படவில்லை.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்குத் தனிச்சபை

அமைச்சர் தொண்டமான் வெளியிட்டிருக்கும் யோசனைகளில் வடக்கு - கிழக்கில் உள்ள சுயாட்சி அமைப்பின் கீழ் முஸ்லிம்களுக்கு பிராந்திய சபைகளை நிறுவுவது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் பிரதேச சபைகளை அமைக்கலாம் என்றும் —

இவ்வாறு அமைக்கப்படும் பிரதேச சபைகளை இணைத்து பிரதேச சபைகளின் ஒன்றியம் ஒன்றை ஸ்தாபிக்கலாம் என்றும் —

அந்த அமைப்பின் மூலம் முஸ்லிம்களின் நலன்களைப் பேணமுடியும் என்றும் திரு. தொண்டமான் தமது கட்சியின் யோசனையில் தெரிவித்திருக்கிறார்.

மத்திய அரசிடமிருந்து வடக்கு, கிழக்கு மாகாண அமைப்பு நிதியைப் பெற்றுக் கொள்ள என்ன அடிப்படை கையாளப்படுகிறதோ, அதே அடிப்படையில் பிரதேச சபைகளின் ஒன்றியமும் நிதியைப் பெற்றுக்கொள்ள உரித்துடையது என்றும்—

இது தவிர, மாகாண அரசின் அனுமதியுடன் —

சர்வதேச நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் உப நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகிய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய அரசின் கட்டுப்பாட்டில் மொத்தம் 39 முக்கிய துறைகள்

யாழ்ப்பாணம், டிச. 18

அமைச்சர் தொண்டமான் தெரிவித்த யோசனைகளின்படி பின்வரும் துறைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

★ பாதுகாப்பு
★ ஸ்ரீலங்கா பாதுகாப்பு
★ கடற்படை, இராணுவம், விமானப் படை ஆகியனவும் அவற்றின் வேலைகளும்
★ தேசிய பொலீஸ் படை
★ போரும், சமாதானமும்
★ வெளிவிவகாரம்
★ இராஜீக, பொது, வர்த்தக பிரதிநிதித்துவம்
★ ஐ. நா. சபை
★ குடிவரவு, குடியகல்வு
★ கடவுச்சீட்டு மற்றும் விஸா
★ சுங்கம்
★ ஓய்வூதியம்
★ மத்திய அரசின் பொதுக் கடன்கள்
★ மாகாணப் பட்டியலில் இடம்பெறாத விடயங்களின் வரி அறவீடுகள்
★ மத்திய அரசின் கணக்கும் பரிசோதனையும்
★ மத்திய வங்கி
★ நிதிக்கொள்கை
★ பண நோட்டு, நாணயம், வெளிநாட்டுச் செலாவணி
★ மத்திய அரசின் வெளிநாட்டுக் கடன்கள்
★ பங்கு மாற்றங்களை விதித்தல்
★ அணுசக்தி
★ வானிலை ஆய்வு நிலை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்புக் கருத்து தற்சமயம் வெளிவராது!

யாழ்ப்பாணம், டிச. 18

அமைச்சர் தொண்டமான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பித்திருக்கும் சமரசத் திட்டத்தை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் பரிசீலனை செய்து வருகிறது; ஆனால் அந்தத் திட்டம் குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இப்போதைக்கு கருத்து எதுவும் வெளியிடமாட்டா என்று தெரிவிக்கப்படுகிறது.

தொண்டமானின் திட்டம் குறித்து விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவரிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டம் அரசினாலோ அல்லது திரு. தொண்டமானால் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்ற முறையிலோ சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் தலைவர் என்ற முறையிலும், எம். பி. என்ற ரீதியிலுமே திரு. தொண்டமான் இந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்தை அரசும், எதிர்க் கட்சிகளும் அங்கீகரிக்க வேண்டும்.

அதன் பின்னரே இந்தத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தவறும் வழியும்

இனப் பிரச்சினை இன்றைய நிலையை அடைந்திருப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே காரணம். இவை இரண்டும் தாம் பதவிக்கு வரவேண்டும் என்பதற்காக இனவாதத்தை வளர்த்தன. இனவாதத்தை மூலதனமாகக் கொண்டே மாறி, மாறிப் பதவிக்கு வந்தன.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்கா.

இந்த இறுதிக் கட்டத்திலாவது அவர் உண்மையைக் கண்டு பிடித்திருக்கிறார்! அதனை வெளிப்படையாகக் கூறியுமுள்ளார்.

இனப்பிரச்சினை இந்தளவு பூதாகாரமாக உருவெடுப்பதற்கும், நாடு சீரழிந்து போவதற்கும் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும், அவர்களின் கட்சிகளுமே காரணம் என்பது மறுக்க முடியாத, மறைக்க முடியாத, மாற்ற முடியாத உண்மை. இலங்கையின் அரை நூற்றாண்டுக் கால அரசியல் சரித்திரத்தை படித்தால் எவருமே தெரிந்து கொள்ளக் கூடிய, புரிந்து கொள்ளவல்ல, அழிக்க முடியாத உண்மை.

தெற்கின் அரசியல்வாதிகள் தங்கள் வாக்கு வங்கிகளை நிறைத்து, வளமாக்கிக் கொள்வதற்காக இனப் பிரச்சினையை, தமிழர்களின் அரசியல் உரிமைகளை மறுப்பதை மூலவளமாக்கினர். அதற்காகப் போட்டி போட்டுக் கொண்டு, சிங்கள மக்கள் மத்தியில் இனத்துவேஷம், இனக்குரோதம் என்ற நச்சு விதைகளைத் தாராளமாக விதைத்தனர்.

தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்குவது சிங்கள இனத்தை விற்பதற்குச் சமமானது. நாட்டைத் தமிழர்களுக்கு விற்பதற்கு ஒப்பானது என்றெல்லாம் சிங்கள மக்களை அரசியல் இருட்டில் மூழ்கடித்தார்கள். அது மட்டுமா?

தமிழர்கள் நடத்திய போராட்டங்களைத் தொடர்ந்து, அவர்களின் உரிமைகளில் சிலவற்றை வழங்குவதற்குப் பதவியில் இருந்த கட்சி முனைந்த போதெல்லாம், எதிரணியில் நின்ற கட்சி அதற்கு முட்டுக் கட்டையாக இருந்தது.

இந்தச் சதியில் அல்லது நாசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி, மாறி ஈடுபட்டு வந்தன.

மேலும் இலங்கை முழுவதும் சிங்களவர் பூமியாக வேண்டும் என்ற நயவஞ்சக நோக்கத்துக்கு இரண்டு கட்சிகளுமே செயல்வடிவம் கொடுத்து வந்தன. இப்போது தொடர்ந்தும் அதில் ஈடுபடுகின்றன.

இந்தத் தவறுகளை திரு. அனுரா பண்டாரநாயக்கா போல சுதந்திரக் கட்சியின் ஏனைய தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். உணர்ந்து கொண்டால் மட்டும் போதாது. திருந்துவதற்கும் மனம் வைக்க வேண்டும்! பழைய வழியை முற்றாக மூடிவிட வேண்டும்!

இரண்டு பிரதான கட்சிகள் மட்டுமன்றி, எதிர்க் கட்சிகளும், புதிய கட்சிகளும் பழைய தவறை மீண்டும் இழைக்காதிருக்க உறுதிபூண வேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான, நியாயமான, நிலையான தீர்வை எட்ட முடியும்.

# சுயாட்சி அமைப்பு ஒன்றை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களாகியும் அது உரிய விதத்தில் அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்யவில்லை; அதற்குள்ள அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாகாணசபை தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்கக் கூட, பல சட்ட, நிர்வாக, அணுகுமுறைத் தடங்கல்கள் உள்ளன—

ஆகையால் வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கு வலுவுள்ள - சக்தியுள்ள - சுயாட்சி அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு வகை செய்யும் விதத்தில் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவந்து—

வேண்டிய சட்டங்களை, நிறைவேற்ற அரசாங்கம் எவ்வித பின்னடிப்பும் இன்றி அதனை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் — என்று திரு. தொண்டமான் தமது மகஜரில் வற்புறுத்தி உள்ளார்.

ஸ்ரீலங்கா பல்லின மக்கள் வாழும் நாடு என்பது மாற்றப்பட முடியாத ஒரு யதார்த்தம், அது அங்கீகரிக்கப்பட வேண்டும்; சிறுபான்மை இன மக்களின் மொழி, கலாசார தனித்துவங்கள் தனித்துவப்படுவது அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய இடர்கள், துன்பங்கள் உணர்வுபூர்வமாக நோக்கப்பட வேண்டும் —

வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஆகக்கூடிய அளவிலான சுயாட்சியை வழங்குவதன் மூலமே இந்த நாடு பிளவுபடுவதைத் தடுக்க முடியும் என்பது இ.தொ.காவின் கருத்தாகும்.

சமாதானத்தை அடைவதற்கு, வடக்கு-கிழக்கு மாகாண மக்களுடன் அதிகாரத்தை பகிர்வதற்கு மத்திய அரசாங்கமும், பெரும்பான்மை இன மக்களும் பொறுப்பு ஏற்க வேண்டியது இன்றியமையாததாகும் — என்று திரு. தொண்டமான் தமது திட்டத்துடன் இணைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாம் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தத் திட்டத்தைப் பகிரங்கப்படுத்தினார். அதன் பிரதி விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

தொண்டாவின் சமரசத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ வடக்கு, கிழக்கு இணைந்த பிரதேசத்துக்கு சுயாட்சி அமைப்பு ஒன்றை அமைத்தல். (Institution for Autonamy) அந்த அமைப்பை மாகாண சபை என்றோ, பிராந்திய சபை என்றோ. சட்டசபை என்றோ, மாநில அரசு என்றோ, வலய சபை என்றோ அழைக்கலாம்.

இந்த யோசனை தீர்வுக்கான ஒரு திட்டத்தின் முழு வடிவம் அல்ல: ஓர் அடிப்படையே (Sketch) ஆகும்: இது பற்றி மேலும் விரிவாக ஆராய்ந்து முடிவு செய்யலாம்.

★ சுயாட்சி அமைப்புக்கு அதன் முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் ஆளுநர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார். அவர் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு அமைய ஐந்து வருடங்கள் வரை பதவியில் இருப்பார்.

★ சுயாட்சி அமைப்புக்கு நடக்கும் தேர்தலில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமனம் பெறுவார்.

★ முதலமைச்சருடன் பத்து அமைச்சர்கள் நியமிக்கப்படுவர்.

★ சுயாட்சி அமைப்புக்கு தனியான செயலகம் இருக்கும்; அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

★ முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் சுயாட்சி அமைப்புக்கு சிரேஷ்ட செயலாளர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார்

## நீதித்துறை

★ வடக்கு - கிழக்கு மாகாண நீதிச்சேவை ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள், ஆரம்ப நீதிமன்றங்கள், மன்றுகள் மற்றும் நீதிச் அமைப்புகளுக்கு பொறுப்பான அதிகாரிகள் இந்த ஆணைக் குழுவினால் பரிபாலிக்கப்படுவர்.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அதி உயர் நீதிமன்றமாக மேல் நீதிமன்றம் இருக்கும். கீழ் நீதிமன்றங்களின் மேன்முறையீடுகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் மேல் நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருக்கும்; இந்த விடயத்தில் அப்பீல் நீதிமன்றின் அதிகாரங்களை வடக்கு-கிழக்கு மேல் நீதிமன்றம் பெற்றிருக்கும்.

வடக்கு - கிழக்கு மேல் நீதிமன்றிற்கு மாகாண முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் பிரதம நீதியரசர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார்;

பிரதம நீதியரசரைத் தலைவராகவும், மேல் நீதிமன்றின் வேறு இரு நீதிபதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு வடக்கு - கிழக்கு நீதிச் சேவை ஆணைக்குழு இயங்கும்.

## காணி

★ வடக்கு, கிழக்கில் உள்ள அரச காணிகளைப் பராமரிக்கவும், நிர்வகிக்கவும், கையளிக்கவும், விற்கவும் சுயாட்சி அமைப்புக்கு அதிகாரம் இருக்கும்.

## சட்டம், ஒழுங்கு

★ வடக்கு, கிழக்கில் சட்டம், ஒழுங்கை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பும் சுயாட்சி அமைப்பைச் சேர்ந்தது.

★ சுயாட்சி அமைப்பு தனியான பொலீஸ் அமைப்பைக் கொண்டிருக்கும்; அதற்கு பொலீஸ் மா அதிபர், உதவி பொலீஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர், பொலீஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் நியமிக்கப்படுவர்.

★ சுயாட்சி அமைப்பு பொலீஸ் சேவைக்குப் புறம்பாக, தேசிய பொலீஸ் சேவை மத்திய அரசுக்குக் கீழ் இயங்கும்;

தேசிய பொலீஸ் சேவைக்கு தேசிய இன விகிதாசாரத்திலும், சுயாட்சி அமைப்பின் பொலீஸ் சேவைக்கு அப் பிராந்திய இன விகிதாசாரத்திலும் ஆட் சேர்ப்பு இடம் பெறும்.

## பொருளாதாரம்

★ சுயாட்சி அமைப்பு தனக்குரிய திட்டமிடல் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்கான நடைமுறைகளைச் செயற்படுத்தவும் அதிகாரம் கொண்டிருக்கும்.

## நிதி

★ ஒரு குறிப்பிட்ட தொகை நிதியை மத்திய அரச சுயாட்சி அமைப்புக்கு ஒதுக்கீடு செய்யும்.

★ எனினும் சுயாட்சி அமைப்பு, தனது அபிவிருத்திக்குத் தேவையான நிதியை வெளிநாட்டிலிருந்து பெறுவதற்கான பேச்சுக்களின் ஈடுபட முடியும்.

★ பின்வரும் வழிகளில் மாகாணசபை நிதியைத் திரட்ட முடியும்.

1\. உதவி 2. வரி 3. நிதி நிறுவனங்கள்
4\. வெளிநாட்டு உதவிகள்

★ மாகாண சபைக்கு பொதுச்சேவை ஆணைக்குழு ஒன்று தனியாக நியமிக்கப்படும்.

## ஆயுதப்படைகள்

★ ஆயுதப்படைக்கு ஆட்சேர்ப்பு இனவிகிதாசார அடிப்படையில் அமைந்திருக்கும்; இதன் அடிப்படையில் போராளிகள் உறுப்பினர்களும் ஆயுதப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இது தவிர, பின்வரும் விடயங்களில் சுயாட்சி அமைப்பு அதிகாரங்களைக் கொண்டிருக்கும்:

★ நில அளவை ★ வனத்துறை ★ நீர்ப்பாசனம்
★ விவசாயம் ★ விலங்கு வேளாண்மை
★ மீன்பிடித்துறை ★ கூட்டுறவு ★ கல்வி
★ உயர் கல்வி — (நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பல்கலைக் கழகங்கள் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில்)
★ சுகாதாரம்
★ ஆயுள்வேதம், சித்த யுனானி மற்றும் மாற்று வைத்திய முறைகள்
★ நிவாரணம், புனரமைப்பு
★ உல்லாசப் பிரயாணத்துறை ★ கனிப்பொருள்
★ சக்தி ★ துறைமுகங்கள்
★ பொதுசனத் தொடர்பு சாதனங்கள் — தொலைக்காட்சி, வானொலி
★ வீடமைப்பு ★ நகரத்திட்டமிடல்
★ பெருந்தெருக்கள் ★ போக்குவரத்து
★ தொழிற்சார் நிபுணர்கள்
★ பத்திரிகைகள், சஞ்சிகைகள், வெளியீடுகள்
★ விலைக் கட்டுப்பாடு ★ நிறுவையும் அளவீடும்
★ ஆறுகளும் நீரோட்டங்களும் — நீர் நிலைகளின் எல்லைகளும், உள்ளூர் நீர் நிலைகளும்
★ கரையோரக் கப்பல் சேவை
★ கடல் எல்லைக்கு அப்பாலான மீன்பிடித் தொழில்
★ சுவடிகள் பிரிவு
★ தொழிலாளர் நலன், சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம்
★ சமூகப் பாதுகாப்பும், காப்புறுதியும்

- ஆகியவையே தொண்டாவின் யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்களாகும். (உ)

# முஸ்லிம்களுக்குத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வற்றுடன் வெளிநாட்டு நிதி உதவியைப் பெறுவது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தவும் பிரதேச சபைகளின் ஒன்றியம் அதிகாரமுடையது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

காணி, சட்டம் ஒழுங்கு, நிதி மற்றும் நிதிசார் நிறுவனங்கள், கல்வி கலாசாரம், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் முஸ்லிம்களுக்கு அரசமைப்பு ரீதியான பாதுகாப்புகளும், தேவையான நிர்வாக ஒழுங்குகளும் செய்யப்படுவது அவசியம் என அந்த யோசனையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் யோசனைகளும் சேர்க்கப்பட்டுள்ளன:-

★ பிரதேச சபைகள் ஒன்றியத்தின் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு சுயாட்சி அமைப்பின் பொலீஸ் பகுதியிடமே இருக்கும்.

எனினும் முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளில் பிரதேச சபைகளின் இன விகிதாசாரப்படியே பொலீஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

முஸ்லிம் பிரதேச சபைகளில் பணிபுரியும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் சகலரும் முஸ்லிம் உதவிப் பொலீஸ் மாஅதிபர் ஒருவரின் கண்காணிப்பிலும் பணிப்பின் கீழும் இயங்குவர்; பிரஸ்தாப உதவிப் பொலீஸ் மா அதிபர் சுயாட்சி அமைப்பின் பொலீஸ் மா அதிபரின் கீழ் பணிபுரிவார்.

★ பிரதேச சபைகள் ஒன்றியத்தின் பகுதியில் உள்ள அரச காணிகளை பராமரித்தல், கண்காணித்தல், நிர்வகித்தல் ஆகிய அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கே உண்டு.

பிரதேச சபைகளின் காணி எதுவும் சுயாட்சி அமைப்பின் உபயோகத்துக்குத் தேவைப்பட்டால் பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ கல்வித் துறையைப் பொறுத்த வரையில், கல்வி நிறுவனங்களை ஸ்தாபித்தல், பாட நூல்களைத் தெரிவு செய்தல், பாடத்திட்டம் ஆகியவற்றை நிர்ணயிப்பதில், பிரதேச சபைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். (அ-உ)

# சிங்களவர்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ளன:-

★ வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு சிங்கள உதவிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டு, சிங்களப் பொலீஸார் அவரது கண்காணிப்பிலும், பணிப்பின் கீழும் இயங்குவர்;

★ சிங்களவர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளுக்கு சுயாட்சி அமைப்பு போதிய நிதியை ஒதுக்க வேண்டும்,

★ சிங்கள மக்களின் மொழி, கலாசார சுதந்திரங்கள் பேணப்பட்டு, அவற்றை வளர்க்க கொள்கைகள் வகுக்கப்படவேண்டும்; [அ-உ]

# குறிப்பிடத்தக்க..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரசுக்கு உரியது; மூன்றாவது இரண்டுக்கும் பொதுவானவை.

இந்த மூன்றாவது பட்டியல் தொண்டமானின் யோசனையில் நீக்கப்பட்டு, அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான துறைகளின் பட்டியல் தனித்தனியாகக் குறிக்கப் பட்டிருக்கிறது.

இதன் மூலம் சுயாட்சி அமைப்பின் அதிகாரம் சார்ந்த துறைகள் ஓரளவு திட்டவட்டமாகத் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றன.

★ சுயாட்சி அமைப்பு தன் பிராந்தியத்தின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள வெளிநாடுகளுடன் பேச்சு நடத்தலாம் என்பதும் தொண்டாவின் யோசனைகளில் இடம்பெற்றிருக்கிறது.

★ இது தவிர காணி, துறைமுகங்கள், கடல் எல்லைக்கு அப்பாற்பட்ட மீன்பிடித்தொழில் போன்றவையும் இந்த யோசனைகளில் சுயாட்சி அமைப்புக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. [அ-உ]

# மற்றைய பெண்ணும் மரணம்

யாழ்ப்பாணம், டிச: 18

குளப்பிட்டிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றைய இளம் பெண்ணும் நேற்றுக் காலை மரணமானார்.

யாழ்ப்பாணம் வலட்டியைச் சேர்ந்த ஜெயந்தி துரைராசஜகிமாம் (வயது 21) என்பவரே நேற்று மரணமானவர் ஆவார்.

ஏற்கனவே இந்த விபத்தின் போது இவருடன் கூடச் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே. (உ-5)

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச: 18

சமூகக்கல்விப் பாட இணைப்பாளருக்காக இன்றும் நாளையும் 19, 20, 21 ஆம் திகதிகளிலும் நடைபெற இருந்த முகாமைத்துவ பயிற்சி நெறி அடுத்த வருட ஆரம்பத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

(உ)

# உத்தேச...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

★ உத்தேச சுயாட்சி அமைப்பு, அபிவிருத்தி வேலைகளுக்கு வெளிநாட்டு உதவியை நேரடியாகப் பெற முடியுமா என்பது ஒரு நிச்சயமற்ற தொனியில், தன்மையுடன் சொல்லப்பட்டுள்ளது.

★ சுயாட்சி அமைப்பின் சட்டசபை பற்றியோ, அதன் சட்டவாக்கல் அதிகாரம் பற்றியோ, சட்டசபைக்கும் நாடாளுமன்றத்துக்கும் உள்ள தொடர்பு, அதிகார வரம்பு ஆகியவை பற்றியோ வரையறை செய்யப்படவில்லை.

★ முதலமைச்சர், அமைச்சர்களின் அதிகாரங்கள், பணிகள் தெளிவு படுத்தப்படவில்லை.

★ சுயாட்சி அமைப்பின் அதிகார வரம்பு, அதற்கு மேல் நாடாளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் ஏதேனும் அதிகாரம் உண்டா என்பவை விவரிக்கப்படவில்லை.

பொதுவாக மேற்கூறிய விடயங்கள் சம்பந்தமாக தொண்டாவின் யோசனையில் போதிய விளக்கங்கள் காணப்படவில்லை எனலாம். [உ]

# மத்திய..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைகள்

★ விமானப் போக்குவரத்து
★ கொழும்புத் துறைமுகம்
★ தேசிய பெருந்தெருக்கள்
★ தேர்தல்கள்
★ தேசிய சொத்துக்கள்
★ கலங்கரை விளக்கங்கள்
★ தர நிர்ணய நிறுவனம்
★ தேசிய பொதுச் சேவை
★ தேசிய பொதுச் சேவை ஆணைக்குழு
★ தபால் தொலைத் தொடர்பு
★ மத்திய அரசின் ஒலி பரப்பு
★ மத்திய அரசின் ஒளி பரப்பு
★ குடிசன மதிப்பீடு
★ ஆட்கள், பதிவு, கண்டுபிடிப்பு, வடிவமைப்பு உரிமைகள்
★ வர்த்தக கைத்தொழில் நிறுவனங்கள்
★ போதைப் பொருள்கள்
★ தொற்று நோய்கள், பயிர் நோய்கள் கட்டுப்பாடு
★ பொது நிதியங்கள்
★ உடைமை மாற்றம், பதிவுகள், உறுதி மற்றும் ஆவணங்கள்

(அ-உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கல்வி நிலையம்

சித்தன்கேணி.

5 ஆம் ஆண்டு

(புனமைப் பரிசிலுக்கான)

கணிதம் — தமிழ்

திரு. சிவநேசன்

(இளைப்பாறிய அதிபர்)

கல்வியாண்டு

பிரிவு I 1992 ஆரம்பமாகிவிட்டது

பிரிவு II 1991 மீட்டல் பயிற்சி வகுப்பு

குறிப்பு:

★ ஒவ்வொரு வகுப்பிற்கும் 35 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்;

★ 28 - 12 - 1991 க்கு முன்னர் அனுமதியை பெற்றுக் கொள்ளவும்.

[4439]



## பயிலுனர் ஆசிரியர் சேவை

A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

வடக்கு - கிழக்கில் அதிக வெற்றிடங்கள்

போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 28-12-91 மு.ப. 9 மணி

பாடநெறி:-

1. பொது உளச்சார்பு 2. பொது அறிவு

தகைமைகள்:- 18 — 35 வயதிற்கு இடைப்பட்ட க. பொ. த. உ/த பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி;

விண்ணப்ப முடிவு திகதி: 06 - 01 - 1992

விண்ணப்பப் படிவங்களையும் விவரத் திரட்டினையும் நேரில் பெறலாம்.

★ இலவச பாடக் குறிப்புகள்

★ விரிவுரைகள் - சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

★ கட்டணம் ரூபா 290.00 [முழுப் பயிற்சிக்கும்]

அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[இ-1079]


## சபிண்டீகரண அழைப்பிதழ்



18-11-1991 இறையடி சேர்ந்த எமது அன்புத்தெய்வம்

### திருமதி மகேஸ்வரி பாலசுப்பிரமணியம்

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் 18 - 12 - 91 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

77, நாயன்மார் வீதி, — குடும்பத்தினர்

நல்லூர். (19077)

## கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 18

மன்னார், பண்டிவிரிச்சான் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஜி. சி. ஈ. (சா. த) பரீட்சை நடந்த வேளையில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சு சம்பவத்தைக் கண்டித்து, இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

மாணவரவை ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில் அனைத்துப்பீட மாணவர்களையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.


## C. C. A.

கலை, வர்த்தகக் கல்லூரி

வெலிங்டன் சந்திக்கருகாமை

புதிய பிரிவு

A/L - 93

பொருளியல் — உதயன்

கணக்கியல் — ஸ்ரீ

வர்த்தகம் — ரட்ணம்

அளவையியல் — சயந்தன்

தமிழ் — குழந்தை

இந்து நாகரிகம் — பாலர

கிறிஸ்தவ நாகரிகம் — கொலின்ஸ்

மு. குறிப்பு:

ஏற்கனவே பிரிவு I இல் பதிவு செய்தவர்கள் பழைய நேர அட்டவணைப்படி வரவும்;

ஆரம்பம்:

2[illegible] - 12 - 1991

7-00 மணி

(இ-1074)



## புதிய உயர் கல்லூரி

(NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

1st in Com.

வியாழன், வெள்ளி வகுப்புக்கள் ஆரம்பம்;

19 - 12 - 1991

மாலை 3-00 மணி

G. A. Q.

English Literature

திரு. சோ. பத்மநாதன்

ஆரம்பமாகிவிட்டன.

(குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்)

★ பேராதனை, யாழ் பல்கலைக்கழகங்களுக்கான

G. A. Q.

1st in Com.

[சனி, ஞாயிறு]

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன;

நிர்வாகி.

திருமதி-

எ[illegible]

(இ-1080)


## அஸாமில் யுத்தநிறுத்தம்

புதுடில்லி, டிச. 18

அஸாம் தீவிரவாதிகள் — அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் [உல்பா] போராளிகள்— இந்தியப் படைகளுக்கு எதிரான தமது போரை நிறுத்தியிருப்பதாக ஒரு தலைப்பட்சமாக நேற்று அறிவித்திருக்கின்றனர்.

கடந்த ஜூலை முதல் தாம் பிடித்து வைத்திருந்த சில பணயக் கைதிகளையும் அவர்கள் விடுவித்தனர்.

உல்பா தீவிரவாதிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அடுத்து அவர்களுடன் இந்திய அரசு விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[உ]

## தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 18

காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் வேலை வாய்ப்புப் பெறுவது குறித்து வகுப்புத் தொழிலாளர்கள் இன்று காலை 10 மணிக்குக் கூடி ஆராயவுள்ளனர்.

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கம் சங்க தலைமைச் செயலகத்தில் கூட்டியுள்ள இந்தக் கூட்டத்தில் சங்க உறுப்பினர்களும், இணைச்செயலக உறுப்பினர்களும் பங்குபற்றுவர். (உ-3)

## புலிகள் தரப்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை நாங்கள் கருத்தூன்றிப் பரிசீலிப்பதோ அல்லது அது குறித்து நாங்கள் கருத்து வெளியிடவோ முடியும்;

### பிரதியே கிடைத்துள்ளது

தெரிவுக் குழுவுக்கு ஒரு கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட சமரசத் திட்டத்தின் பிரதி எங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் வைத்தே நாம் அதனைப் பரிசீலனை செய்கிறோம்;

தமது உத்தேச திட்டத்துக்கு அரசினதும், சிங்கள மக்களினதும் இணக்கத்தைப் பெறுவது அமைச்சர் தொண்டமானைப் பொறுத்தது;

அரசும், சிங்களக் கட்சிகளும் இந்தத் திட்டத்தை ஒருவேளை நிராகரிக்கலாம்; ஆகவே இப்போது உடனடியாக அது பற்றிப் பேசுவதில் பயனில்லை.

### பயனற்றது

தமது திட்டத்துக்கு அரசு மற்றும் சிங்களக் கட்சிகளின் இணக்கத்தைப் பெறாமல் திரு. தொண்டா இங்கு வந்து அதுபற்றி எங்களுடன் பேசுவதும் பயனற்றது.

ஆனால் அந்த இணக்கத்தைப் பெற்ற பின்னரே தொண்டா இங்கு வந்து பேச வேண்டும் என்று நாம் நிபந்தனை விதிக்கவில்லை; அவர் இங்கு வரலாம்; எமது மக்களின் நிலையை நேரில் கண்டறியலாம்; மற்றைய விடயங்களைப்பற்றி எம்முடன் பேசலாம்.

இராணுவத் தீர்வு காணும் எண்ணத்தை அரசு கைவிடவில்லை போல் தெரிகிறது.

சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்கி, பேச்சு நடத்துவோம் என்று அரசோ திரு. தொண்டமானோ கூறவில்லை.

இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்கி, பொருளாதாரத் தடை மூலம் மக்களை நெருக்கி, மக்களைப் பட்டினி போட்டு, புலிகளைப் பலவீனப்படுத்தி, ஒரு பக்கத்தில் ஒதுக்கி விட்டு, அதன் பின்னர் பேச்சு நடத்தலாம் என அரசு நினைக்கிறது. ஆனால் அரசு அந்த [illegible] பெறப் [illegible] — என்றார்.

(உ)

## ஜனவரியில் ஈழப்பிரகடனம்!

எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி யாழ்ப்பாணப் பகுதியை தனிநாடு என்று அறிவிக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக 'லங்காதீப' என்ற சிங்கள தினசரிச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் தனிநாட்டுக்கான பொது நிர்வாகத்தை தொடக்கும் வகையில் விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரமுகர் திரு. சோசரத்தினம் யோகி திட்டமிட்டு வருவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் எட்டுப் பொலிஸ் நிலையங்களும், ஐந்து அஞ்சல் அலுவலகங்களும் இரண்டு தொலைத் தொடர்பு நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற அலுவல்களுக்கு என ஓய்வுபெற்ற வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் 'லங்காதீப' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

## கொத்தணி அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 18

1992 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கான கூட்டங்கள் கல்விக் கோட்டங்கள் ரீதியாக நடைபெறவுள்ளன. இக் கூட்டங்களில் கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. விவரம் வருமாறு:-

நாளை

காலை 9 மணி:- யாழ். கோட்டம் — யாழ். சாதனை பாடசாலை:

பிற்பகல் 2 மணி:- மருதனார் மடம் கோட்டம் — இராமநாதன் கல்லூரி.

நாளை மறுதினம்

பிற்பகல் 2 மணி:- பண்டத்தரிப்புக் கோட்டம் — பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

21 ஆம் திகதி

காலை 9 மணி:- தென்மராட்சி கோட்டம் — சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி;

பிற்பகல் 2 மணி:- வடமராட்சி கோட்டம் — வடஇந்து மகளிர் கல்லூரி.


## Jaffna College Institute of Technology

Vaddukoddai.

# VACANCY

Applications are invited from suitable qualified candidates for the following post.

## INSTRUCTOR

(Computer Dept)

**Qualification:**

a) Applicants should have N.C.C Diploma in Computer studies or JCIT Diploma with Class or NIBM Diploma with class;

b) Ability to program in COBOL. d BASE III+' LOTUS 1-2-3 etc. Knowledge of IBM. system operation with MS / PC DOS & Xenix will be an added qualification.

**Experience:**

Minimum one year Teaching experience in Computer Technology.

**Salary:**

Negotiable, depending on qualification & experience.

Apply with Full Bio - Data to the

Director,

JAFFNA COLLEGE,

INSTITUTE OF TECHNOLOGY,

Vaddukoddai.

On or before: 31st December 1991.

[C-1118]


## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் அபிராமிப்பிள்ளை

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், இல. 25, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய அபிராமிப்பிள்ளை நேற்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், அருளையா (இளைப்பாறிய தபால் அதிபர்), காலஞ்சென்ற கனகேந்திரம் (உரிமையாளர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) சவுந்தரம் (லீலா), நவபாக்கியம், நமசிவாயம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரேமா (தொலைத் தொடர்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்), கமலேஸ்வரி, சோமசுந்தரம், கணேசலிங்கம் (கொழும்பு ஸ்டோர், பண்டாரவளை), சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (19-12-1991) முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] வீதி, 360/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18. 12. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org